

ஸ்ரீ:

ஸ்ரீ பூர்வரங்கநாயகீ ஸமேத ஸ்ரீ பூர்வரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ மதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

உயர்வற வுயர்நலம் முடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

- **நம்மாழ்வார்**

ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்
ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்
கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்து
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே

- **குலசேகராழ்வார்**



நாகை மாவட்டம் கீழ்வேளூர் வட்டம்

# கீழையூர்

## அருள்மிகு ஸ்ரீ பூர்வரங்கநாயகித் தாயார் ஸமேத
## அருள்மிகு ஸ்ரீ பூர்வரங்கநாதப் பெருமாள் ஆலய

**விமான ஜீர்ணோத்தாரண புனரஷ்டபந்தன மஹாஸம்ப்ரோக்ஷண**

# மஹாகும்பாபிஷேகப் பத்திரிக்கை

**27-08-2015 வியாழக்கிழமை காலை மணி 8.00 க்கு மேல் 9.30 க்குள்**

## கீழையூர் - தலப்பெருமை

எம்பெருமான், ஸ்ரீயபதியாய், அவாப்த ஸமஸ்த காமனாய், ஸகல கல்யாண குணாத்மகனாய் ஸகல ஜீவராசிகளையும் உஜ்ஜீவிக்கும் பொருட்டு பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமியைக் கடந்து அர்ச்சா ஸ்வரூபமாய் ஸ்ரீவகுண்டத்திலிருந்து இப்பூவுலகிற்கு எழுந்தருளி ஸேவை ஸாதிக்கும் திவ்ய க்ஷேத்திரங்களுள் மிகவும் சிறப்பு பெற்றது கீழையூர் என்கிற கீழரங்க க்ஷேத்திரம்.

பஞ்சரங்க க்ஷேத்திரங்களான ஸ்ரீரங்கம், வடரங்கம், ஆதிரங்கம், மேலரங்கம் மற்றும் கீழரங்கத்தில் இவ்வூர் கிழக்கே அமைந்திருப்பதால் கீழரங்கம் என்ற கீழையூராயிற்று.

முன்னொரு காலத்தில் இந்த க்ஷேத்திரத்தின் வடபால் அமைந்துள்ள கங்கையிற் புனிதமான காவிரியின் கிளையான சந்திரநதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்த மார்க்கண்டேய மகரிஷியின் மேல் கருணை கொண்டு ஓர் இடையனப் போல மாடுகளை மேய்த்த வண்ணம் பெருமாள் குழலிசைக்க, மகரிஷி அந்த தேவகானத்தை கேட்டு ஞான திருஷ்டியால் வந்திருப்பது பரந்தாமனே என்று உணர்ந்து எம்பெருமான் திருவடிகளைப் பணிந்தார். பெருமாளும் தைமாதம் 2ம் நாள் கருடாரூடராய் மகரிஷிக்கு ஸேவை ஸாதித்து உமக்கு யாது வேண்டும் என்று வினவ அடியேனுக்கு திருவரங்கத்தைப் போலவே ஸேவை ஸாதிக்க வேணுமெனப் பிரார்த்திக்க,

**குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி**<br>
**வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி**<br>
**கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத்துயிலுமா கண்டு**<br>
**உடலெனக் குருகுமாலோ என் செய்கேன் உலகத்தீரே !**

என்னும் தொண்டரப்பொடி ஆழ்வார் பாசுரப்படி, மேற்கே திருமுடியையும், கிழக்கே திருவடியையும் வடக்கே பின்புறமாகவும் தெற்கு நோக்கிச் சயனத் திருக்கோலத்தில் ஸேவை ஸாதித்து அருளினார். இவ்வாறான பள்ளிகொண்ட பரந்தாமனைத் தரிசித்து அளவில்லா மகிழ்ச்சி அடைந்த மார்க்கண்டேய மகரிஷி,

**அம்ருத ரஸஜரீனாம் அந்தரங்கை : அபாங்கை ;**<br>
**அவநத ஜனதாயா : ஹர்ஷமங்கூரயந்தம்**<br>
**கமபி ஜலதி கன்யா மேதினீ காந்தமேகம்**<br>
**புருஷமஹம பச்யம் பூர்வரங்கே சயானம்**

என்று இந்த பூர்வரங்க க்ஷேத்திரத்தில் சயனத்தில் உள்ள எம்பெருமானைப் பார்த்து அமிழ்தம் கிட்டியது போன்ற சந்தோஷத்தை அடைந்ததாக மங்களாசாசனம் செய்தருளினார்.

இவ்வாலய வளாகத்தில் கருட புஷ்கரணியில் தவம்புரிந்த அதிரூபவல்லித் தாயாரை எம்பெருமான் மணம் புரிந்துகொண்ட விசேஷமான இந்த சன்னிதி ஜீர்ணோத்தாரணம் செய்யப் பெற்று ஸ்வஸ்தி ஸ்ரீ மன்மத வருஷம் **ஆவணி மாதம் 10ம் நாள் (27-08-2015) வியாழக்கிழமை** சுக்ல பக்ஷம் திரயோதசியும் உத்திராட நக்ஷத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் **காலை 8.00 மணிக்கு மேல் 9.30 மணிக்குள்** கன்யா லக்னத்தில் பெருமாள் சன்னிதி, ராஜ கோபுரம், தாயார் சன்னிதி, ஆண்டாள் சன்னிதி, விஷ்வக்ஸேனர் சன்னிதி, கருடன் சன்னதி, நிகமாந்த மஹா தேசிகன் சன்னிதி, ஆழ்வார்கள், ஆசாரியர்கள், தும்பிக்கை ஆழ்வார் ஆகிய சன்னதிகளுடன், ஸ்ரீ ராமர், கோபாலன், நூதன சக்கரத்தாழ்வார், அனுமார் சன்னிதிகளும் மஹாசம்ப்ரோக்ஷணம் (மஹா கும்பாபிஷேகம்) செய்து கொள்வதாக **ஸ்ரீ பூர்வரங்க நாயகி ஸமேத ஸ்ரீ பூர்வ ரங்கநாதப் பெருமான்** திருவுள்ளப்படி **ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்** நியமந மங்களாசாஸந பூர்வமாக நடை பெறுவதால் ஆஸ்திக மெய்யன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு தரிசனம் செய்து பெருமாளின் பேரருளைப் பெறுமாறு பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

**கீழையூர் கிராமவாசிகள்**<br>
**சாகுபடிதாரர்கள்**<br>
**திருப்பணி உபயதாரர்கள்**<br>
மற்றும்<br>
**கீழையூர் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஸங்கல்ப டிரஸ்ட் அங்கத்தினர்கள்**

யாகசாலை நிர்வாகம்<br>
ஸ்ரீ வைகானஸ, சாஸ்த்ர, கான, ஜோதிஷ<br>
ஞான ஸாகரம், ப்ரதிஷ்டாரத்நார்ணவம்<br>
**ஸ்ரீ உ.வே. எஸ் ஸௌம்ய நாராயண பட்டாச்சாரியார் ஸ்வாமி**<br>
கீழையூர்

ஆலய அர்ச்சகர்<br>
**ஸ்ரீ ஆர். முரளிதரன்**

# யாகசாலை நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|---|
| ஆவணி 6 | 23-08-2015 | ஞாயிறு | காலை | விஷ்வக்ஸேனர் திருமஞ்சனம், கிராம பரிவார தேவதைகள் திருமஞ்சனம் |
| | | | மாலை | பகவத் பிரார்த்தனை, ஸங்கல்பம், விஷ்வக்ஸேனர் வழிபாடு, ம்ருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப்பணம், வாஸ்து சாந்தி |
| ஆவணி 7 | 24-08-2015 | திங்கள் | காலை | தீர்த்த க்ரஹணம், ஸ்ரீ மஹா ஸுதர்சன, நரசிம்ம, ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஹோமம்<br>பெருமாள் மூலவர் திருமஞ்சனம், பூர்ணாஹுதி,<br>விசேஷ கட திருமஞ்சனம், திருவாராதனம், சாற்றுமுறை |
| | | | மாலை | ஆசார்யர்கள் அழைப்பு, திருவாராதனம், வேத, பிரபந்த தொடக்கம், கும்பஸ்தாபனம், கலாகர்ஷணம், ரக்ஷாபந்தனம், அக்னி மதனம், அக்னி ப்ரணயனம், யாகசாலை ப்ரவேசம், பஞ்ச ஸூக்த ஹோமம்<br>**பூர்ணாஹுதி, திருவாராதனம், சாற்றுமுறை - காலம்-1** |
| ஆவணி 8 | 25-08-2015 | செவ்வாய் | காலை | விச்வரூபம், புண்யாஹ வாசனம், திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை ஸேவை, கால சந்தி, திருவாராதனம், நித்ய ஹோமம், ததுக்த ஹோமம், மஹாசாந்தி ஹோமம், உத்ஸவர் திருமஞ்சனம்<br>**பூர்ணாஹுதி, திருவாராதனம், சாற்றுமுறை - காலம்-2** |
| | | | மாலை | அதிவாஸ ஹோமம், அக்ஷிமோசன ஹோமம், கோ பூஜை, மஹாசாந்தி ஹோமம், ஸர்வ தேவார்ச்சனை,<br>**அஷ்டபந்தன மருந்து சாத்துதல்**<br>ஸாயரக்ஷை, சயனாதி வாஸம், ஹௌத்திரம், ப்ரதான ஹோமம்<br>**பூர்ணாஹுதி, திருவாராதனம், சாற்றுமுறை - காலம்-3** |
| ஆவணி 9 | 26-08-2015 | புதன் | காலை | ஸுப்ரபாதம், கோ பூஜை, விச்வரூப தரிசனம், புண்யாஹ வாசனம், கால சந்தி, திருவாராதனம், நித்ய ஹோமம், மஹா சாந்தி ஹோமம், உத்ஸவர் திருமஞ்சனம்<br>**பூர்ணாஹுதி, திருவாராதனம், சாற்றுமுறை - காலம்-4** |
| | | | மாலை | மஹா சாந்தி ஹோமம், கஜ பூஜை, கன்யா பூஜை, ஸுவாஸினி பூஜை, தீப பூஜை, சயனாதி வாஸம், ப்ரதான ஹோமம், கூஷ்மாண்ட ஹோமம்<br>**பூர்ணாஹுதி, திருவாராதனம், சாற்றுமுறை - காலம்-5** |
| ஆவணி 10 | 27-08-2015 | வியாழன் | காலை | விச்வரூப தர்சனம், புண்யாஹ வாசனம், கால சந்தி, திருவாராதனம், நித்ய ஹோமம், ப்ரதான ஹோமம், மூலமந்த்ர ஹோமம்,<br>**பூர்ணாஹுதி - காலம்-6** |
| **27-08-2015 வியாழக்கிழமை**<br>**காலை 8 மணிக்கு மேல் 9.30 மணிக்குள்** | | | | யாத்ரா தானம், கடங்கள் ஆலய வலம் வருதல்<br>**விமானங்கள் கும்பாபிஷேகம்**<br>**மூலவர் மஹாசம்ப்ரோக்ஷணம்,**<br>திருவாராதனம், ப்ரும்ம கோஷம், வேத விண்ணப்பம், சாற்றுமுறை<br>தீர்த்த பிரசாதங்கள் வழங்குதல் |
| அன்று இரவு | | | | கருட சேவை புறப்பாடு |

**யாகசாலை பூஜை நேரங்களில் வேத பாராயணங்கள், திவ்யபிரபந்த பாராயணங்கள் மற்றும் நாதஸ்வர இன்னிசை கச்சேரிகள் நடைபெறும்.**



உற்சவர் அருள்மிகு ஸ்ரீ ஆயனார்

## ஸ்தல குறிப்புகள்

கீழையூர் என்கிற கீழரங்க க்ஷேத்திரமானது நாகப்பட்டினம் - திருத்துறைப்பூண்டி செல்லும் கிழக்குக் கடற்கரை சாலையில் புத்தூர் சந்திப்பில் இருந்து இருபது கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

ஒன்பதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளதற்கான சான்றுகள் உள்ள இத் திருக்கோயில் புராதன மாடக்கோயிலாக அமைந்து உள்ளது.

ஸ்ரீ ரங்கத்தைப் போலவே இந்த க்ஷேத்திரமும் தெற்குத் திசையில் கோபுர வாசலுடன் இருப்பது சிறப்பாகும்.

| திருப்பணி நன்கொடை அனுப்ப வங்கி கணக்கு விபரங்கள் | |
|---|---|
| Account Number | 0346000100394349 |
| Account Name | KEELAIYUR SRI RANGANATHA PERUMAL SANKALPA TRUST (SAVINGS ACCOUNT) |
| Bank | PUNJAB NATIONAL BANK |
| Branch | Triplicane Branch, Chennai-5 |
| IFSC Code | PUNB0034600 |

**கும்பாபிஷேக விழாவைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டல அபிஷேகம், பூஜைகள் நடைபெறும்.**

**பங்குபெற விரும்புவோர், விழாக் குழுவினரை அணுகி பதிவு செய்து ரசீது பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

Book Post

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டம்

# கீழையூர்

அருள்மிகு பூர்வரங்கநாயகித் தாயார் ஸமேத

# அருள்மிகு ஸ்ரீ பூர்வரங்கநாதப் பெருமாள் ஆலய

# மஹாஸம்ப்ரோக்ஷணப் பத்திரிக்கை

**மன்மத வருடம் ஆவணி மாதம் 10ம் நாள் - 27-08-2015 வியாழன் காலை 8 மணி**

திரு / திருமதி ______________________